DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.10/2025 | Deposition of Witness for : PW2 |
| Name : இசக்கியம்மாள் | Father/Husband Name : நவநீதகிருஷ்ணன் |
| Age : 35 | Village : பேய்க்குளம் |
| Taluk : சாத்தான்குளம் | Calling : தனியார் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29 June 2026.

Accused Present.

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது பேய்க்குளத்தில் குடியிருந்து தனியார் மெடிக்கலில் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 ஐ தெரியும், என்னுடைய தம்பி ஆவார். கடந்த 03.02.2024 அன்று காலை 5.15 மணிக்கு காலைக்கடனை கழிப்பதற்காக என் அப்பா வெளியே சென்றுவிட்டார். அவர் வீட்டிற்கு மேற்கில் இருந்து கிழக்கில் நடந்து வந்துகொண்டிருந்தபோது TN 76 AC 2036 என்ற எண் கொண்ட TVS வண்டி என் அப்பாவை பின்புறத்தில் இருந்து மோதிவிட்டது. இசக்கிமுத்து என்பவர் எங்களுக்கு தகவல் கூறினார். இசக்கிமுத்து மற்றும் விலங்குடையார் என் அப்பாவை லியோ கிளினிக்கில் சிகிச்சைக்காக அனுமதித்தார்கள். நாங்கள் அங்கு சென்ற பார்த்தபோது என் அப்பா தலையில் அடிபட்டு மூச்சி பேச்சில்லாமல் இருந்தார். மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு என் அப்பாவை அழைத்துச் சென்றோம். சிகிச்சை பலன் அளிக்காமல் 04.02.2024 அன்று அதிகாலை 3.30 மணியளவில் என் அப்பா இறந்துவிட்டார். இதுசம்பந்தமாக அ.சா.1 போலீசாரிடம் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

2. போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். நான் எவ்வளவு படித்துள்ளேன் என்றால் டிப்ளமோ படித்துள்ளேன். போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். நான் வாக்குமூலமாக கூறியதைத்தான் போலீசார் எழுதினார்கள் என்றால் சரிதான். நான் போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலம் தான் உண்மை என்றால் சரிதான்.

3. என்னுடைய தகப்பனாருக்கு எப்படி காயம் ஏற்பட்டது, எப்படி இறந்தார் போன்ற விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நாங்கள் கேள்விப்பட்டு பேய்க்குளத்தில் உள்ள லியோ கிளீனிக் சென்றோம், அங்கு என்னுடைய அப்பாவுக்கு முதல் சிகிச்சை கொடுத்தார்கள், அந்த கிளினிக்கில் என்னுடைய அப்பாவிற்கு தையல் போட்டிருந்தார்களா என்றால் இரத்தம் வெளியேறாமல் இருப்பதற்காக தலையில் துணி வைத்து கட்டியிருந்தார்கள். லியோ கிளீனிக்கில் உள்ள மருத்துவரிடம் என்னுடைய

 DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.06.29 17:18:02 +0530 

அப்பாவிற்கு எப்படி காயங்கள் ஏற்பட்டது என்று கூறினோமா என்றால் மருத்துவர்கள் தான் என்னிடம் கூறினார். லியோ கிளீனிக்கில் உள்ள மருத்துவருக்கு காயங்கள் எவ்வாறு ஏற்பட்டிருக்கும் என்று தெரிந்திருக்கும் என்றால் சரிதான். என்னுடைய அப்பா விபத்தில் இறந்ததற்காக இழப்பீடு பெற்றுக்கொண்டோமா என்றால் பெற்றுக்கொண்டோம். இழப்பீடு பெறுவதற்கு காவல்துறையின் உதவி தேவைப்பட்டது என்றால் சரிதான். அதனால் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டு நாங்கள் இழப்பீடு பெற்றுக்கொண்டோம் என்றால் சரியல்ல, மருத்துவமனையில் இருந்து புகார் அளித்தவுடன் போலீசார் வந்தார்கள்.

4. போலீசார் மருத்துவமனைக்கு வந்தபோது நான் எத்தனை பேப்பரில் கையெழுத்து செய்து கொடுத்தேன் என்றால் ஒரு பேப்பரில் கையெழுத்து செய்து கொடுத்தேன். நான் கையெழுத்து செய்த பேப்பரில் ஏதாவது எழுதியிருந்தார்களா என்றால் போலீசார் நான் கூறியதை பேப்பரில் எழுதியிருந்தார்கள். முதலில் போலீசாரிடம் விபரங்களை கூறியது யார் என்றால் அ.சா.1 கூறினார். மருத்துவமனையில் வைத்து நானும் அ.சா.1ம் ஒரே பேப்பரில் கையெழுத்து செய்து கொடுத்தோம் என்றால் சரிதான். அ.சா.1 காவல்நிலையத்திற்கு சென்று புகார் அளித்தாரா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. என்னுடைய அப்பாவுக்கு வேறு எங்கோ ஏற்பட்ட விபத்தின் காரணமாக இறந்ததை இழப்பீடு பெறுவதற்காக பொய்யான புகாரின் பெயரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் போலீசார் விசாரணையிலும் நீதிமன்ற விசாரணையிலும் நான் முரண்பாடாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.29 17:18:08 +0530

Judicial Magistrate, Sathankulam.